கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சிப் பள்ளி துவங்கும் திட்டம்

*9425— திரு. அ. இராசேந்திரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு மேற்பார்வையாளர் பயிற்சிப் பள்ளி துவங்கும் எண்ணம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் கூட்டுறவு பயிற்சி நிலையம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. இராசேந்திரன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து பிரிந்திருக்கிற திருவண்ணாமலை —சம்புவராயர் மாவட்டத்திற்கு பல வசதிகள் வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. அதில் இந்த கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியும் ஒன்று. அது பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால் இதை அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. இந்த 9 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களுக்கு ஒவ்வொரு நிலையத்திற்கும் இரண்டு மாவட்டங்கள் செயல் எல்லைகளாக இருக்கிற காரணத்தாலே, வேலூரில் உள்ள அந்த கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தில், சம்புவராயர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் படிப்பதற்கான வாய்ப்பு உண்டு என்ற காரணத்தால் இப்போது மேலும் ஒரு பயிற்சி நிலையம் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெற்ற மேற்பார்வையாளர்களுக்குத் தமிழ்நாட்டில் எத்தனை பேருக்கு வேலை தரப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்பில்லாத கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

1990 ஆகஸ்ட் 23]

திரு. எஸ். எஸ். தென்னரசு ; பேரவைத் தலைவர் அவர்களே கூட்டுறவு அமைச்சர் அவர்கள் இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு பயிற்சி பள்ளி என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு விட்டது. சென்ற ஆண்டு கிழக்கு இராமநாதபுரத்திற்கு ஒரு பயிற்சிப்பள்ளி வேண்டுமென்று கேட்டு விண்ணப்பித்து இருந்தோம். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூரில் ஒரு பயிற்சி நிலையம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடம் இப்போது விபரம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கேட்டது கிழக்கு இராமநாதபுரம்.

அணைத் திட்டங்கள்.

* 566—திரு. ஆர். ஈஸ்வரன்: :

திரு. சு. குருநாதன்

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோம்பையாா் அணைத் திட்டம், உள்ளார் அணைத் திட்டம், கோட்டமலையார் அணைத் திட்டம், வாழமலையார் திட்டம் ஆகியவைகளை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

9-40 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோம்பையாறு அணைக்கட்டுத் திட்டம் பொருளாதார அடிப்படையில் பயன் தராது என்பதால் ஏற்கனவே கைவிடப்பட்டது. உள்ளார் அணைக் கட்டுத் திட்டத்திற்கு வனப்பகுதி நிலங்கள் தேவைப்படுகின்றன. ஆய்வுப் பணிகளைத் தொடங்குவதற்காக வனத் துறையின் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோட்டமலையார்